**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 158 of 2022**

Prosecution witness LW13 (PW11) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 10.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| Name | : | திரு.அதியமான் | Father Name | : | திரு.மணி |
|---|---|---|---|---|---|
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் சூளக்கரை கிராமத்தில் வசிக்கிறேன் . நான் டிராக்டர் டிரைவராக பணிபுரிகிறேன். எனக்கு உறவுமுறையில் கேசவன் சித்தப்பா வேண்டும். ஓலா கம்பெனியில் செக்யூரிடியாக அவர் வேலை பார்த்து வந்தார் . சுமார் 5 வருடம் முன்பாக உழவு ஓட்டுவதற்காக நான் போய் இருந்தேன் . அதன்பிறகு இரவு 7.30 மணிக்கு ஊருக்கு வந்து இருந்தேன் . அப்போது கேசவனுக்கு அடிப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். பஸ் ஸ்டாண்டு அம்பேத்கர் சிலை பக்கத்தில் அடிப்பட்டதாக சொன்னார்கள். ஒரு பையன் மேட்டுதாங்கலை சேர்ந்தவர் கேசவனை அடித்துவிட்டதாக சொன்னார்கள். இரவு 7.30 மணிக்கு அந்த அம்பேத்கர் சிலை சூளக்கரை பஸ் ஸ்டாண்டு அருகே போனபோது சுமார் 100 பேர் இருந்தார்கள். நான் அங்கு போவதற்கு முன்பாகவே போலீசார் அந்த இடத்தில் இருந்தார்கள் . போலீசார் என்ன நடந்தது என்று விசாரித்துக்கொண்டு இருந்தார்கள் . நான் மக்களோடு மக்களாக நின்றுக்கொண்டு இருந்தேன். தற்போது காண்பிக்கப்படும் பார்வை

மகஜரிலுள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது இல்லை . என்னை போலீசார் மறுநாள் காலை விசாரித்தார்கள் . என்னுடன் மூர்த்தி என்ற ஊர் நாட்டாமையும் அந்த இடத்தில் இருந்தார் , அவரையும் போலீசார் விசாரித்தார்கள் அவரை விசாரிக்கும் போது என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலீஸ் விசாரணையின்போது கடந்த 21.10.2021 ம் தேதி காலை 6.00 மணிக்கு சூளக்கரை பஸ் டாப் அருகே அம்பேத்கர் சிலை அருகேயுள்ள பெரியார் சிலை அருகே நானும் எங்கள் ஊரை சேர்ந்த மூர்த்தி என்பவரும் போனபோது காவல் ஆய்வாளர் கேசவன் கொலை வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் , அதில் நானும், மூர்த்தி என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரியும் நானும் , பக்கத்து பக்கத்து ஊர் என்பதால் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2025.06.17 19:30:41 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 158 of 2022**

Prosecution witness LW9 (PW10) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 10.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.ஜெயகுமார் | Father Name | : | திரு.துரைசாமி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused Present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் சூளக்கரை கிராமத்தில் வசிக்கிறேன் . நான் கூலி வேலையை செய்கிறேன். நான் நிலத்தில் வேலை செய்வேன் , கூலி வேலைக்கு போய் வருவேன். எங்கள் ஊரை சேர்ந்த கேவசன் எங்கு வேலை பார்த்து வந்தார் என்ற விவரம் தெரியாது. கேசவனுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் , ஒரு பெண் பிள்ளை. கேசவன் 2-3 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் . கேசவனின் இறப்பு நிகழ்வில் நான் கலந்து கொண்டேன் . பிரச்சனை வந்து அதனால் கேசவன் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன் . யார் பிரச்சனை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது . பிரச்சனை ஏற்பட்டு , அடிப்பட்டு இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். அவருக்கு எங்கு அடிப்பட்டது என்ற விவரம் தெரியாது. யார் அடித்தார்கள் என்ற விவரம் தெரியாது . போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.</u>

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலீஸ் விசரணையின் போது கடந்த 20.10.2021 தேதி மாலை 6.30 மணியளவில் சூளக்கரை பஸ் நிறுத்தம் அருகே , அம்பேத்கர் சிலை அருகே நான் சென்றபொழுது எங்கள் ஊரை சேர்ந்த கேசவன் என்பவரிடம் தம்பிதுரை (எ) அறிவு பீடி கேட்டு தகராறு செய்துக்கொண்டு இருந்தார் என்றும், தகவல் அறிந்து கேசவனின் மகள் அன்புநிலா, அவருடைய கணவர் தமிழ்குடிமகன், கோவிந்தசாமி ஆகியோர் அங்கு வந்தார்கள் என்றும் , அப்பொழுது ஏற்பட்ட வாய் தகராறில் தம்பிதுரை கேசவனின் கண்ணத்தில் மாறி மாறி அடித்து தன் கையில் அணிந்திருந்த இரும்பு வளைத்தை கழற்றி கேசவனின் வலது பக்க கண்ணத்தில் குத்தினார் என்றும் , கீழே விழுந்த கேசவனின் நெஞ்சின் மீது தம்பிதுரை ஏறி உட்கார்ந்துக்கொண்டு நெஞ்சின்மீது கையில் குத்தினார் என்றும் , நாங்கள் தடுத்தோம் என்றும் , கேசவன் மூச்சி போச்சி இன்றி இருந்தார் என்றும் , அவரை அன்புநிலா, தமிழ்குடிமகன் கோவிந்தசாமிக்கு சொந்தமான காரில் போச்சம்பள்ளி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும் , மருத்துவமனையில் இரவு 7.10 மணிக்கு கேசவன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும், இது சம்பந்தமாக அன்புநிலா கல்லாவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் ,போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் , அடிப்பட்ட கேசவன் எந்த கம்பெனியில் பணிபுரிந்தார் என்று தெரியாது என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை</u>**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2025.06.17 19:30:48 +0530